சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : - **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 03 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.நி.ம.எண்.04/2026**

**இன்**

**அசல் வழக்கு எண்.174/2020**

சேகர் .... மனுதாரர்/பிரதிவாதி

**// எதிராக //**

செல்வம் .... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 15.06.2026 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.ராமஜெயம்,எம்.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை குறுக்கு விசாரணைக்காக மீண்டும் அழைத்து (Re-call) தக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 ன் கீழ் மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்: -**

(i) தான் மேற்கண்ட வழக்கின் மனுதாரர்/எதிர்மனுதாரர் ஆவேன் என்றும்,



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.07.03 17:10:29 +0530

இவ்வழக்கின் சங்கதிகள் அனைத்தும் தனக்கு நன்கு தெரியும் என்றும், இந்த உறுதிமொழிப் பத்திரத்தை தாக்கல் செய்யவும், அதிலுள்ள சங்கதிகளை உறுதிப்படுத்தவும் தான் தகுதியுடையவன் ஆவேன் என்றும், மேற்கண்ட தரப்பினருக்கிடையே நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.174/2020 என்ற வழக்கு இம்மாண்புமிகு நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளது என்றும், மனுதாரர் தரப்பில் தனது குறுக்கு விசாரணைக்காக இவ்வழக்கு 20.04.2026 அன்று விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது என்றும்,

(ii) தான் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் நடத்துநராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், தமிழ்நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் தொடர்பான பணிகள் மற்றும் தேர்தல் ஆணையம் மற்றும் மாநில அரசின் உத்தரவின்படி போக்குவரத்து ஏற்பாடுகளுக்காக அனைத்து பணியாளர்களும் கட்டாயம் பணியில் ஈடுபட வேண்டும் என தனது துறையின் உயரதிகாரிகள் அறிவுறுத்தியதால், 20.04.2026 அன்று தனக்கு விடுப்பு வழங்க மறுத்தனர் என்றும், தனது மேலதிகாரிகளின் உத்தரவுக்கு கட்டுப்பட்டு பணியில் ஈடுபடுவதைத் தவிர தனக்கு வேறு வழியில்லை என்றும், மேற்கண்ட சூழ்நிலையை தனது கற்றறிந்த வழக்கறிஞருக்கு முறையாகத் தெரிவித்தேன் என்றும், அவர் 20.04.2026 அன்று இம்மாண்புமிகு நீதிமன்றத்தின் கவனத்திற்கு மேற்கண்ட உண்மையை எடுத்துரைத்து, தேர்தல் நடைமுறைகள் 23.04.2026 அன்று நிறைவடைந்த பின்னர் அவகாசம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தார் என்றும்,

(iii) இருப்பினும், இம்மாண்புமிகு நீதிமன்றம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியத்தை முடித்துவைத்து, வழக்கை இறுதி வாதத்திற்காக ஒத்திவைத்தது என்றும், எனினும், தான் ஆஜராக இயலாமல் போனது தேர்தல் பணியின் காரணமாக ஏற்பட்ட தவிர்க்க முடியாத சூழ்நிலையினாலேயே அன்றி, வேண்டுமென்றே செய்த தவறோ அல்லது அலட்சியத்தினாலோ அல்ல என்பதை பணிவுடன் சமர்ப்பிக்கிறேன் என்றும், தனது



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.03 17:10:32 +0530

சாட்சியத்தை மீண்டும் திறந்து, தன்னை குறுக்கு விசாரணைக்காக மீண்டும் ஆஜர்படுத்த அனுமதிக்காவிட்டால், தனக்கு ஈடு செய்ய முடியாத பாதிப்பு ஏற்பட்டு, நீதியின் நோக்கம் முற்றிலும் பாதிக்கப்படும் என்றும், இம்மாண்புமிகு நீதிமன்றம் நிர்ணயிக்கும் எந்தத் தேதியிலும் குறுக்கு விசாரணைக்காக ஆஜராக தான் தயாராகவும் விருப்பத்துடனும் இருக்கிறேன் என்றும், இம்மனு நல்லெண்ணத்துடனும் நீதியின் நலன் கருதியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மாண்புமிகு நீதிமன்றம் பிறப்பிக்கும் அனைத்து உத்தரவுகளையும் தான் முழுமையாகக் கடைப்பிடிப்பேன் என்றும் மனுதாரர் தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளனர்.

3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக பாவிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

4. **இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**<u>தீர்வு</u>** : -

5. மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை குறுக்கு விசாரணைக்காக மீண்டும் அழைத்து (Re-call) தக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17ன் கீழ் மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

6. மனுதாரர்/பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது மனுவில், தான் மேற்கண்ட வழக்கின் மனுதாரர்/எதிர்மனுதாரர் ஆவேன் என்றும், இவ்வழக்கின் சங்கதிகள் அனைத்தும் தனக்கு நன்கு தெரியும் என்றும், இந்த உறுதிமொழிப் பத்திரத்தை தாக்கல் செய்யவும், அதிலுள்ள சங்கதிகளை உறுதிப்படுத்தவும் தான் தகுதியுடையவன் ஆவேன் என்றும், மேற்கண்ட தரப்பினருக்கிடையே நிலுவையில் உள்ள அசல் வழக்கு



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.03 17:10:34 +0530

எண்.174/2020 என்ற வழக்கு இம்மாண்புமிகு நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளது என்றும், மனுதாரர் தரப்பில் தனது குறுக்கு விசாரணைக்காக இவ்வழக்கு 20.04.2026 அன்று விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது என்றும், தான் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் நடத்துநராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், தமிழ்நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் தொடர்பான பணிகள் மற்றும் தேர்தல் ஆணையம் மற்றும் மாநில அரசின் உத்தரவின்படி போக்குவரத்து ஏற்பாடுகளுக்காக அனைத்து பணியாளர்களும் கட்டாயம் பணியில் ஈடுபட வேண்டும் என தனது துறையின் உயரதிகாரிகள் அறிவுறுத்தியதால், 20.04.2026 அன்று தனக்கு விடுப்பு வழங்க மறுத்தனர் என்றும், தனது மேலதிகாரிகளின் உத்தரவுக்கு கட்டுப்பட்டு பணியில் ஈடுபடுவதைத் தவிர தனக்கு வேறு வழியில்லை என்றும், மேற்கண்ட சூழ்நிலையை தனது கற்றறிந்த வழக்கறிஞருக்கு முறையாகத் தெரிவித்தேன் என்றும், அவர் 20.04.2026 அன்று இம்மாண்புமிகு நீதிமன்றத்தின் கவனத்திற்கு மேற்கண்ட உண்மையை எடுத்துரைத்து, தேர்தல் நடைமுறைகள் 23.04.2026 அன்று நிறைவடைந்த பின்னர் அவகாசம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தார் என்றும், இருப்பினும், இம்மாண்புமிகு நீதிமன்றம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியத்தை முடித்துவைத்து, வழக்கை இறுதி வாதத்திற்காக ஒத்திவைத்தது என்றும், எனினும், தான் ஆஜராக இயலாமல் போனது தேர்தல் பணியின் காரணமாக ஏற்பட்ட தவிர்க்க முடியாத சூழ்நிலையினாலேயே அன்றி, வேண்டுமென்றே செய்த தவறோ அல்லது அலட்சியத்தினாலோ அல்ல என்பதை பணிவுடன் சமர்ப்பிக்கிறேன் என்றும், தனது சாட்சியத்தை மீண்டும் திறந்து, தன்னை குறுக்கு விசாரணைக்காக மீண்டும் ஆஜர்படுத்த அனுமதிக்காவிட்டால், தனக்கு ஈடு செய்ய முடியாத பாதிப்பு ஏற்பட்டு, நீதியின் நோக்கம் முற்றிலும் பாதிக்கப்படும் என்றும், இம்மாண்புமிகு நீதிமன்றம் நிர்ணயிக்கும் எந்தத் தேதியிலும் குறுக்கு விசாரணைக்காக



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.03 17:10:37 +0530

ஆஜராக தான் தயாராகவும் விருப்பத்துடனும் இருக்கிறேன் என்றும், இம்மனு நல்லெண்ணத்துடனும் நீதியின் நலன் கருதியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மாண்புமிகு நீதிமன்றம் பிறப்பிக்கும் அனைத்து உத்தரவுகளையும் தான் முழுமையாகக் கடைப்பிடிப்பேன் என்றும் மனுதாரர்/வாதி தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளனர்.

7. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது பாகப்பிரிவினை வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்காக இருந்தபோது பி.வா.சா.1 நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பாதால் பி.வா.சா.1ன் சாட்சியம் முடிக்கப்பட்டு வழக்கின் வாதத்திற்காக வாய்தா போடப்பட்ட நிலையில் இம்மனுவை தாக்கல் செய்து Re-open செய்ய வேண்டுமென்றும், பி.வா.சா.1 சாட்சியை மீண்டும் அழைக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதி தனது பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி சாட்சியானவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணி செய்து வருவதாகவும், விடுமுறை கொடுக்கப்படவில்லை என்பதால் 20.04.2026 ல் ஆஜராக இயலவில்லை என்று தெரிவித்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே உள்ளது. எனவே நீதியின் நலனை கருத்தில் கொண்டு இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

8. **இறுதியாக,** மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை (DW1) குறுக்கு விசாரணைக்காக மீண்டும் அழைத்து (Re-call) இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம்



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.07.03 17:10:40 +0530

செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 03 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.03 17:10:45 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

**<u>இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** : -

-- இல்லை -

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.03 17:10:43 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.